**தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025**

**பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்**

**சமூக அறிவியல் – வகுப்புகள் 3 முதல் 5 வரை**

தொடக்கநிலை, சமூக அறிவியல் பாடத்திற்கான கலைத்திட்டம், குழந்தைகளுக்கு உள்ளூர்ச் சூழல், வாழ்வியல் அனுபவங்கள் வாயிலாக ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் கூடிய கற்றல் அனுபவத்தை வழங்குகிறது. குழந்தைகளின் வகுப்பறைக் கற்றல் என்பது, தேடித்தேர்ந்து அறிதல் (Inquiry), கலந்துரையாடல், செயல்திட்டம் (Project), களச் செயல்பாடு போன்ற கற்பித்தல் முறைகள் வாயிலாக, அவர்களுக்கு மிகவும் அறிமுகமான வீடு, பள்ளி, சுற்றுப்புறம், சமூகம், விழாக்கள், மரபுகள் முதலிய பாடப்பொருள்களோடு இணைக்கப்பட்டுள்ளன. இவை குழந்தைகள் தங்கள் அன்றாட வாழ்க்கையுடன் இணைத்துக் கருத்துகளைக் கட்டமைக்க உதவுகின்றன. இக்கலைத்திட்டம், குழந்தையைத் தான் வாழும் இடத்திலிருந்து மாவட்டம், மாநிலம், நாடு, உலகம் என்ற சுருள்மைய முன்னேற்றப் பாதையில் (Spiral Progression) வழிநடத்துகிறது. சமூக அறிவியல் பாடத்திற்கே உரிய விழுமியங்கள், அரசியலமைப்பு மதிப்புகளான சமத்துவம், சுதந்திரம், நீதி போன்றவை கலை, இசை, வாழ்வியல் திறன்கள், உடலியக்கச் செயல்பாடுகள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு குழந்தையைச் சமூக உறவுகளைப் புரிந்துகொண்டு சமூகத்தில் பொறுப்புடன் பங்கேற்க வழிநடத்துகிறது.

TNSCERT DRAFT SYLLABUS

<table>
<tr><th rowspan="2">திறன்கள்</th><th colspan="3">பாடப்பொருள்</th></tr>
<tr><th>வகுப்பு 3</th><th>வகுப்பு 4</th><th>வகுப்பு 5</th></tr>
<tr><td colspan="4">CG –1. நானும் என்னைச்சுற்றியுள்ளவர்களும் – தன் அடையாளம் மற்றும் உலகத்துடனான உறவுகளை ஆராய்தல்.</td></tr>
<tr>
<td>C–1.1. தன்னை அறிதல்; நேர்மறையான எண்ணங்களை வளர்த்தல்<br><br>C–1.2. தான் என்ற அடையாளத்துடன் தொடர்புடைய உலகின் பல்வேறு கூறுகளைப் புரிந்துகொள்ளுதல்<br><br>C–1.3. தன் அடையாளம் வெளிப்படும் இடங்களைத் தொடர்புபடுத்திக் கண்டறிதல்.</td>
<td>□ தன்னை அறிதல்<br>○ நான் யார் என்பதில் பெருமிதம் கொள்ளுதல்.<br>○ எனது பலங்கள், ஆர்வங்கள் மற்றும் திறமைகள்.<br>○ எனது உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் அவற்றைக் கனிவுடன் வெளிப்படுத்துதல்.<br>□ நாங்கள் அனைவரும் தனித்துவமானவர்கள் மற்றும் சமமானவர்கள்<br>○ ஒவ்வொருவரும் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். வகுப்பில் உள்ளவர்களிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள். அனைவரையும் சமமாகவும் அன்பாகவும் நடத்துதல்.</td>
<td>□ பெயர்கள் மற்றும் அடையாளம்<br>○ ஒரு குழந்தையாக, மாணவராக, மற்றும் நண்பராக இருப்பது முக்கியமான மற்றும் மதிக்கத்தக்க அடையாளங்கள். மரியாதையை வெளிப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்துப் புரிந்துகொள்ளுதல்.<br>□ நம்மைச் சுற்றியுள்ள சமூகம்<br>○ நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தை உருவாக்கும் மக்கள், இடங்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புகளை அடையாளம் காணுதல்.</td>
<td>□ பரந்த சமூகத்தைப் புரிந்துகொள்ளுதல்<br>○ சுற்றியுள்ள பரந்த சமூகமானது பகிர்ந்து செய்யும் பணிகள், இடங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலமாக எவ்வாறு அருகமைப்பகுதிகள், நகரங்கள் மற்றும் மாவட்டங்களுடன் இணைந்துள்ளன என்பதைக் கண்டறிதல்.<br>□ வேற்றுமைகளை மதித்தல்<br>○ மொழி, பண்பாடு, திறமைகள், ஆர்வம் மற்றும் வாழ்க்கை முறைகளில் உள்ள வேறுபாடுகள், ஒரு சமூகத்தின் வலிமை என்பதை அறிதல் மற்றும் மதித்தல்.</td>
</tr>
</table>

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | □ **எனது வகுப்பறைச் சமூகம்**<br>○ எனது வகுப்பறையில் என்னுடன் பணியிலும் கற்றலிலும் ஈடுபடுபவர்கள். (நண்பர்கள், ஆசிரியர்கள், உதவியாளர்கள்)<br>○ வகுப்பறையில் மரியாதைக்குரிய நடத்தைகள்: பிறர் பேசுவதைக் கேட்டல்; கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எப்போதும் பணிவுடன் பேசுதல்; ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல், உதவுதல் மற்றும் செயல்களைச் செய்ய முன்வருதல்.<br>○ வேற்றுமைகளின் மீதான சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துதல். | □ **பள்ளி ஒரு சமூகம்**<br>○ பள்ளி என்பது அனைவருக்குமானது என்பதை அங்கீகரித்தல் மற்றும் வகுப்பறைகள், விளையாட்டு மைதானங்கள், நூலகம் மற்றும் பொதுவான பகுதிகள் போன்ற முக்கிய இடங்களை அடையாளம் காணுதல்.<br>□ **பள்ளியில் உரிமைகளும் பொறுப்புகளும்**<br>○ பள்ளியைப் பாதுகாப்பானதாகவும் ஏற்றத்தாழ்வற்றதாகவும் அனைவருக்குமானதாகவும் வைத்துக் கொள்வதில் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்து கொள்ளுதல். | □ **பழைமைவாத நம்பிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்குதல் மற்றும் சவால் விடுதல்.**<br>○ பொதுவான பழைமைவாதங்களை (Stereotypes) அடையாளம் காணுதல், அவை எவ்வாறு உருவாகின்றன என்பதைப் புரிந்துகொள்ளுதல், மக்கள் மற்றும் குழுக்கள் குறித்து நுணுக்கமாகவும் மரியாதையாகவும் சிந்திக்கக் கற்றுக்கொள்ளுதல்.<br>□ **அருகமையில் உள்ள முக்கியமான இடங்கள்**<br>○ நிருவாக அலுவலகங்கள், போக்குவரத்து மையங்கள், கலாச்சார மையங்கள், மருத்துவமனைகள் மற்றும் சந்தைகள் போன்ற மாவட்டத்தின் முக்கிய இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் சமூக வாழ்வில் அவற்றின் பங்கை அறிதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | **பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான எல்லைகள்**<br>○ தனக்குரிய இடத்தைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ வகுப்பறையில் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை.<br>○ எப்போது, எவ்வாறு உதவி கேட்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுதல்.<br><br>**குடும்பம் மற்றும் உறவுகள்**<br>○ குடும்ப உறுப்பினர்களை அடையாளம் கண்டு அவர்களின் பங்கு மற்றும் பங்களிப்பை அறிந்து மதித்தல்.<br><br>**ஒன்றுகூடி இருத்தல்**<br>பள்ளி வழிபாட்டுக் கூட்டங்கள், அருகமைப் பகுதியில் நிகழும் திருவிழாக்கள், குடும்ப விழாக்கள் மற்றும் கண்காட்சிகளில் கூடுவதன் மூலம் அனுபவங்களைப் பெறுதல் | **குடும்பங்கள் மற்றும் நீட்டிக்கப்பட்ட குடும்பங்கள்**<br>○ தனிக்குடும்பம் மற்றும் நீட்டிக்கப்பட்ட குடும்பங்களை (Extended families) அரவணைப்பு, பொறுப்புகள் மற்றும் மரபுகளைப் பகிர்ந்துகொள்ளும் சமூகங்களாகப் புரிந்துகொள்ளுதல்.<br>**திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள்**<br>○ சமூகத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்கள், கண்காட்சிகளை அடையாளம் கண்டு மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவதன் காரணங்களைப் புரிந்துகொள்ளுதல்.<br>**சமூகமாக உள்ள அருகமைப்பகுதி**<br>○ அருகமையில் உள்ள முக்கியமான இடங்களையும் அவை சமூக வாழ்க்கைக்கு எவ்வாறு உறுதுணை புரிகின்றன என்பதையும் கண்டறிதல். | **சமூகமும் அடையாளமும்**<br>○ குடும்பம், நீட்டிக்கப்பட்ட குடும்பம், அருகமைப்பகுதி மற்றும் சமூக மரபுகள் எவ்வாறு தனிப்பட்ட அடையாளத்தைக் கட்டமைக்கின்றன என்பதை ஆராய்தல்.<br>**நம்மைச் சுற்றியுள்ள மக்களிடமிருந்து கற்றல்**<br>○ நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களிடமிருந்து கற்ற அறிவு, திறன்கள் மற்றும் விழுமியங்களை வெளிப்படுத்துதல்.<br>**கொண்டாட்டங்கள் மற்றும் சமூகப் பிணைப்புகள்**<br>○ திருவிழாக்கள், கண்காட்சிகள் மற்றும் ஒன்றுகூடல்கள் எவ்வாறு உறவுகளை வலுப்படுத்துகின்றன மற்றும் நற்பண்புகளை வளர்த்தெடுக்கின்றன என்பதைப் பகுத்தறிதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | **கொண்டாட்டங்களால் ஏற்படும் மனவெழுச்சிகள்**<br>○ கொண்டாட்டங்களின் போது ஏற்படும் குழந்தைகளின் மகிழ்ச்சி, பாதுகாப்பு மற்றும் பங்கேற்பினை உருவாக்குவது எது என்பதைப் பகிர்தல்.<br>**எனது அருகமைப்பகுதிச் சமூகம்**<br>○ அருகமைப்பகுதியைச் சமூகமாக அங்கீகரித்தல் மற்றும் வீடுகள், பூங்காக்கள், கடைகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் போன்ற அருகிலுள்ள முக்கிய இடங்களை அடையாளம்காணுதல்.<br>**மற்றவர்களிடமிருந்து கற்றல்**<br>○ நம்மைச் சுற்றியுள்ள நண்பர்கள், குடும்பத்தினர், ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்களிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம் என்பதைக் கவனித்தல். | **சமூகமும் அடையாளமும்**<br>○ குடும்பம், பள்ளி மற்றும் அருகமைப்பகுதி எவ்வாறு விழுமியங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் ஒருமைப்பாட்டு உணர்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>**மாநிலத்தின் முக்கியமான இடங்கள்**<br>○ தலைநகரம், தலக்குறியீடுகள் மற்றும் கலாச்சார அல்லது பொது நிறுவனங்கள் போன்ற மாநிலத்தின் முக்கிய இடங்களை அடையாளம் காணுதல். | **குடியிருப்புகளைப் புரிந்துகொள்ளுதல்**<br>○ மக்கள், வேலை மற்றும் வாழ்விடங்களின் அடிப்படையில் கிராமங்கள், சிறுநகரங்கள் மற்றும் பெருநகரங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஒப்பிடுதல்.<br>**மாநிலத்தின் முக்கியமான வரலாற்று இடங்கள்**<br>○ மாநிலத்தின் முக்கியமான நிருவாக, கலாச்சார மற்றும் பொருளாதார இட அமைவைக் கண்டறிதல் மற்றும் அவற்றின் பங்கை விளக்குதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| CG – 2. தன் மதிப்பு மற்றும் உரிமைகள் – மனிதத் தேவைகள், விருப்பங்கள், சுய மதிப்பு மற்றும் உரிமைகளைப் புரிந்துகொள்ளுதல் | | | |
|---|---|---|---|
| **C–2.1. மனிதத் தேவைகள்** தன்னைப் பற்றியும் தன் அடிப்படைத் தேவைகள் குறித்தும் புரிந்துகொள்ளுதல். பிறரைப்பற்றியும், அவர்களின் தேவைகள் மற்றும் அவர்களுடனான உறவுகள் பற்றிப் புரிந்து கொள்ளுதல். (மரியாதை, இரக்கம் மற்றும் சார்ந்திருத்தல்).<br><br>**C–2.2. தனக்கும் பிறருக்குமான மனித கண்ணியத்தைப் புரிந்துகொள்ளுதல்**<br><br>**C–2.3. தனக்கும் பிறருக்குமான அடிப்படை மனித உரிமைகளை அடையாளம் காணுதல்.** | **எளிய எடுத்துக்காட்டுகளின் மூலம் தேவைகளின் பொருளைப் புரிந்துகொள்ளுதல்.**<br>○ அனைத்து உயிரினங்களின் அடிப்படைத் தேவைகளை (உணவு, நீர், உறைவிடம்) அடையாளம் காணுதல்.<br>○ அடிப்படை மனிதத் தேவைகளை (உணவு, உடை, உறைவிடம், அரவணைப்பு, ஓய்வு) அடையாளம்காணுதல்.<br>○ தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் (Needs vs Wants) உள்ள வேறுபாட்டினை அறிதல்.<br>**உணர்வுகள் மற்றும் மனவெழுச்சிகள்**<br>○ பொதுவான நேர்மறை மற்றும் எதிர்மறை உணர்வுகளை அடையாளம்காணுதல். | **அடிப்படைத் தேவைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை மீளாய்வு செய்தல்.**<br>○ தன்னிடமும் பிறரிடமும் உள்ள உடல் மற்றும் மனவெழுச்சித் தேவைகளை அடையாளம் காணுதல்.<br>○ வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு தேவைகள் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>**உணர்வுகள் மற்றும் மனவெழுச்சிகள்**<br>○ மற்றவர்களின் மனவெழுச்சிகளை அங்கீகரித்தல்.<br>○ உணர்வுகளைக் கண்ணியத்துடன் பகிர்தல்.<br>○ கவனத்துடன் கேட்கவும் பதிலளிக்கவும் கற்றுக்கொள்ளுதல். | **மனிதத் தேவைகள்**<br>○ தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் உள்ள வேறுபாட்டை உண்மை வாழ்க்கை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.<br>○ அடிப்படைத் தேவைகளை, கண்ணியம் மற்றும் நலவாழ்வுடன் இணைத்தல்.<br>○ நிறைவேற்றப்படாத தேவைகள், தனிநபரையும் சமூகத்தையும் பாதிக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ **உணர்வுகள் மற்றும் மனவெழுச்சிகள்**<br>○ மனநலம் மற்றும் மனநலப் பாதுகாப்பைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ வலுவான மனவெழுச்சிகளை நேர்மறையாகக் கையாளப் பயிற்சியளித்தல்.<br>○ மற்றவர்களிடம் இரக்கம் மற்றும் ஆதரவு காட்டுதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | ○ சொற்கள், வரைபடங்கள் அல்லது கதைகள் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்துதல்.<br>○ உணர்வுகள் மாறக்கூடியவை என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br><br>□ **பாதுகாப்பு**<br>○ எளிய பாதுகாப்பு விதிகளைக் கற்றல் – வீட்டில், பள்ளியில், சாலையில்.<br>○ உதவிக்கு நம்பிக்கைக்குரிய பெரியோரை அடையாளம் காணுதல். | □ **மற்றவர்களுடனான பிணைப்பு**<br>○ நெருங்கிய உறவுகளைப் புரிந்துகொள்ளுதல் (குடும்பம், நண்பர்கள், ஆசிரியர்கள்).<br>○ ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை அங்கீகரித்தல் – மக்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு உதவுகிறார்கள்.<br>○ ஆதரவு, ஒத்துழைப்பு மற்றும் பகிர்தலை மதித்தல்.<br><br>□ **பாதுகாப்பு**<br>○ உடல் மற்றும் மனவெழுச்சி சார்ந்த பாதுகாப்பைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ பாதுகாப்பு விதிகளைக் கற்றல்: பொது இடங்களில், இணையத்தில் (வயதுக்குரிய).<br>○ பாதுகாப்பான மற்றும் பொறுப்பான நடத்தையைப் பின்பற்றுதல். | ○ **மற்றவர்களுடனான பிணைப்பு**<br>பரந்த அளவில் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதைப் புரிந்துகொள்ளுதல் (பள்ளி, அருகமைப்பகுதி, சமூகம்).<br>○ மற்றவர்களுக்கு உதவுதல் மற்றும் அக்கறை காட்டுதலின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்.<br>○ ஒருங்கிணைந்து செயலாற்றுவதையும் பொறுப்புகளைப் பகிர்ந்து செய்தலையும் மதித்தல்.<br><br>□ **பாதுகாப்பு**<br>○ உடல் மற்றும் உளவியல் பாதுகாப்பைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்துதல்: பொது இடங்கள், அவசர நிலைகள் (அடிப்படை விழிப்புணர்வு).<br>○ எப்போது, எப்படி உதவி நாடுவது என்பதை அறிந்து கொள்ளுதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | **அடையாளம் மற்றும் சுய மதிப்பு**<br>○ தனிப்பட்ட அடையாளத்தை அங்கீகரித்தல் (பெயர், குடும்பம், விருப்பங்கள்).<br>○ ஒவ்வொருவரும் சிறப்பு வாய்ந்தவர்கள் மற்றும் மதிப்புமிக்கவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ இணக்கமற்ற சூழல்களில் 'வேண்டாம்' (NO) என்று சொல்லவும் உதவி கேட்கவும் கற்றுக்கொள்ளுதல்.<br>**இலக்குகள் மற்றும் சாதனை**<br>○ இலக்கு என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ எளிய குறுகிய கால இலக்குகளை அமைத்தல் (வேலையை முடித்தல், ஒரு திறனைக் கற்றல்).<br>○ இலக்குகளை அடையும்போது மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளுதல். | **அடையாளம் மற்றும் சுய மதிப்பு**<br>○ தன் உணர்வுகள் மற்றும் எண்ணங்களை மதித்தல்.<br>○ மற்றவர்களின் உணர்ச்சிகள் மற்றும் வேறுபாடுகளை மதித்தல்.<br>○ தனக்காகத் தன்னை நிலைநாட்டுவதை கண்ணியமாக வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ளுதல்.<br>**இலக்குகள் மற்றும் சாதனை**<br>○ குறுகிய கால இலக்குகளை அமைத்தல் மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.<br>○ முயற்சி மற்றும் குழுப்பணியைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ தன்னுடைய மற்றும் பிறரின் சாதனைகளைக் கொண்டாடுதல். | **அடையாளம், சுய மதிப்பு மற்றும் கண்ணியம்**<br>○ மனித கண்ணியம் மற்றும் சுய மரியாதையைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ மற்றவர்களின் மதிப்பு மற்றும் உரிமைகளை மதித்தல்.<br>○ நியாயமற்ற அல்லது பாதுகாப்பற்ற நடத்தையை எதிர்த்துக் கண்ணியமான முறையில் நிற்றல்.<br>**இலக்குகள், தேவை மற்றும் சாதனை**<br>○ குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அமைத்தல்.<br>○ இலக்குகள் எவ்வாறு தேவையை ஏற்படுத்தி வழிநடத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ சாதனைகள், முயற்சி மற்றும் தவறுகளிலிருந்து எவ்வாறு கற்றுக்கொள்ளலாம் என்பது பற்றிச் சிந்தித்தல். |

TNSCERT DRAFT SYLLABUS

| CG – 3. பள்ளி மற்றும் சமூக வாழ்க்கையில் உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்பை ஆராய்தல் | | | |
|---|---|---|---|
| **C–3.1. உள்ளூர் நிறுவனங்களைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அடையாளம் காணுதல்.**<br><br>**C–3.2. சமூகத்திற்கு உதவும் மற்றும் சமூகத்தைப் பராமரிக்கும் மக்களையும் நிறுவனங்களையும் அடையாளம் காணுதல்.** | ○ அருகமையில் உள்ள உள்ளூர் நிறுவனங்களை அடையாளம் காணுதல் (பள்ளி, தபால் நிலையம், மருத்துவமனை, காவல் நிலையம், நூலகம், கோயில், மசூதி, தேவாலயம், பூங்கா).<br>○ இந்த நிறுவனங்கள் என்ன செய்கின்றன என்பதை எளிமையாகப் புரிந்துகொள்ளுதல்.<br>○ அன்றாட வாழ்வில் உள்ளூர் நிறுவனங்கள் மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.<br>○ இந்நிறுவனங்களில் பணிபுரியும் நபர்களையும் அவர்களின் பங்கையும் அடையாளம் காணுதல்.<br>○ சமூக உதவியாளர்கள் மற்றும் அவர்களின் பணிகளுக்கு மரியாதை காட்டுதல். | ○ வெவ்வேறு உள்ளூர் நிறுவனங்கள், பள்ளி மற்றும் சமூகத்திற்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை விவரித்தல்.<br>○ நிறுவனங்கள் எவ்வாறு இணைந்து செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளுதல் (எ.கா. மருத்துவ முகாம்களின் போது மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள்).<br>○ பாதுகாப்பு, சுகாதாரம், கற்றல் மற்றும் பொழுதுபோக்கு போன்ற சமூகத் தேவைகளை நிறுவனங்கள் எவ்வாறு நிறைவு செய்கின்றன என்பதை ஆராய்தல்.<br>○ நிறுவனங்களில் விதிகள், ஒத்துழைப்பு மற்றும் அளிக்கப்பட்ட பொறுப்புகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.<br>○ தன்னார்வலர்கள் மற்றும் சேவைப் பணியாளர்களின் பங்களிப்பிற்கு மதிப்பளித்தல். | ○ சமூக நல்வாழ்வு மற்றும் மேம்பாட்டிற்குரிய உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்பைப் பகுத்தறிதல்.<br>○ உரிமைகள், பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை நிறுவனங்கள் எவ்வாறு பாதுகாக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ சமூக சேவை மற்றும் ஆதரவு அமைப்புகளின் நடப்பு வாழ்க்கை நிகழ்வுகளை உணர்ந்து அறிதல்.<br>○ குழந்தைகள் உட்பட குடிமக்கள், உள்ளூர் நிறுவனங்களுக்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம் மற்றும் பராமரிக்கலாம் என்பது குறித்துக் கலந்துரையாடுதல்.<br>○ எளிய சமூக அல்லது பள்ளி சார்ந்த முயற்சிகளில் பங்கேற்றல். (விழிப்புணர்வு பிரச்சாரங்கள், நூலகப் பயன்பாடு). |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | **அன்றாட வாழ்விற்குத் துணைபுரியும் நிறுவனங்களை அடையாளம் காணுதல்**<br>○ பள்ளி, போக்குவரத்து/சாலை, சுகாதாரம், மருத்துவமனை, காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், வங்கி, தபால் நிலையம். | **உதவும் நபர்களை அடையாளம் காணுதல்**<br>○ வகுப்பறைக்குள்.<br>○ பள்ளியில்.<br>○ வீட்டில்.<br>**நேரடி ஆதரவு** – அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து காவலர்கள், பேருந்து/ஆட்டோ ஓட்டுநர்கள்/நடத்துநர்கள், தூய்மைப் பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், வங்கி/தபால் ஊழியர்கள், நூலகர்கள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் அவசர எண்கள்.<br>**மறைமுக ஆதரவு** – விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், குழாய்ச் செப்பனிடுவோர் (Plumbers), மின்சாரப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், தொடர்வண்டி ஓட்டுநர்கள் போன்றோர். | **பணத்தைப் புரிந்துகொள்ளுதல்**<br>○ பரிமாற்றத்திற்கான ஊடகம்.<br>○ சேமிப்பு மற்றும் பணத்தின் மதிப்பைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ விலைகளை ஒப்பிடுதல்.<br>**அரசு / அரசு சேவைகள்**<br>○ ஊராட்சி<br>○ மாவட்டம்<br>○ மாநிலஅரசு (நகரம்/நகராட்சி/மாநகராட்சி)<br>**மக்களின் பங்கேற்பு** – வகுப்பறையில் மாதிரி வாக்கெடுப்பு நடத்துதல்.<br>○ அடிப்படைப் பொருளாதாரத்தைப் புரிந்துகொள்ளுதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| CG – 4. சமூக வாழ்க்கையில் கலை மற்றும் விளையாட்டின் பங்கை ஆராய்தல். | | | |
|---|---|---|---|
| **C–4.1. சமூக இணக்கத்தைப் பேணுவதில் கலை மற்றும் பொழுதுபோக்கின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல்.**<br><br>**C–4.2. உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் விளையாட்டு வடிவங்களை அடையாளம் காணுதல்.**<br><br>**C–4.3. நம்மை மகிழ்விக்கும் கலைஞர்களை அடையாளம் கண்டு பாராட்டுதல் / மதித்தல்.** | **விளையாட்டு மற்றும் கலை**<br>○ விளையாட்டுகளை அடையாளம்காணுதல் மற்றும் பெயரிடுதல் – பிடித்தவை மற்றும் பிடிக்காதவை.<br>○ குழந்தைகள் செய்யும் பல்வேறு கலை வடிவங்களை அடையாளம்காணுதல் மற்றும் பெயரிடுதல்.<br>○ குழந்தைகள் பார்க்கும் மற்றும் இரசிக்கும் கலைவடிவங்களை அடையாளம்காணுதல்:<br>○ பள்ளியில்.<br>○ வீட்டில் – ஊடகங்கள் வழியாக.<br>○ உடனடிச் சூழலில்.<br>○ மனித உணர்வுகளில் விளையாட்டு மற்றும் கலைகளின் தாக்கம்.<br>○ கலைஞர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வழிகளை அடையாளம்காணுதல். | **குழு விளையாட்டுகள் மற்றும் குழு கலை வடிவங்கள் இணக்கமான உறவுகளை வளர்க்க எவ்வாறு உதவுகின்றன?**<br>○ தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலை வடிவங்கள்.<br>○ தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகள். | **சமூகத்தைக் கட்டமைப்பதில் விளையாட்டு மற்றும் கலைகளின் பங்கு**<br>○ தமிழ்நாட்டின் முக்கியமான கலை மற்றும் விளையாட்டு ஆளுமைகள். |

TNSCERT DRAFT SYLLABUS

| CG – 5. வரலாற்றைப் பற்றிய அடிப்படைப் புரிதலை வழங்குதல் – உள்ளூர் முதல் உலகம் வரை | | | |
|---|---|---|---|
| **C–5.1. வரலாறு பற்றிய அடிப்படை புரிதல். எனது வாழ்க்கை மற்றும் என்னைச் சுற்றியுள்ள கடந்த காலம்**<br><br>**C–5.2. மாநிலம் மற்றும் அருகமைப் பகுதிகளின் வரலாற்றைப் புரிந்துகொள்ளுதல்**<br><br>**C–5.3. மனித குலத்தின் வரலாறு**<br>**C–5.4. இயற்கை வரலாறு** | **தனிப்பட்ட வரலாறு, கற்பனை மற்றும் கால உணர்வு**<br>○ அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் மூலம் கடந்த காலம்,நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ நாள்தோறும் பயன்படுத்தும் ஒரு பொருள் (பல் துலக்கி, சீப்பு, உடை, பானை, புத்தகம்) காலப்போக்கில் எவ்வாறு மாறியுள்ளது என்பதைக் கற்பனை செய்தல்.<br>**கதைகளைக் கேட்டல்**<br>○ வீட்டிலிருந்து கதைகளைக் கேட்டல். ஆரம்பகால தமிழ்ச் சமூகத்தின் அன்றாட வாழ்க்கைக் கதைகள் (வீடுகள், உணவு, உடை, விளையாட்டுகள்).<br>○ கதைகள், பொருள்கள் மற்றும் மக்களின் நினைவுகள் மூலம் வரலாற்றைக் கற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளுதல் | ○ **இடம், மக்கள் மற்றும் பண்பாட்டுத் தொடர்ச்சி**<br>○ மக்கள், இடங்கள் மற்றும் நிகழ்வுகளின் கதைகளாக வரலாற்றைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ தமிழ்நாட்டின் புகழ்பெற்ற வரலாற்றுச் சின்னங்களை அறிதல்.<br>○ தமிழ்நாட்டு வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்பவை:<br>○ ஐந்திணைகள் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை).<br>○ விவசாயிகள்,வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களின் அன்றாட வாழ்க்கை.<br>○ தமிழ்நாட்டு வரலாற்றில் புகழ்பெற்ற மனிதர்கள். நகரங்கள், கிராமங்கள், பள்ளிகள் மற்றும் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி பெரியவர்களால் பகிரப்பட்ட கதைகளைக் கேட்டல். | ○ **மனிதப் பரிணாமம், நாகரிகம் மற்றும் இயற்கை வரலாறு**<br>○ பண்பாடு மற்றும் நாகரிகத்தின் பொருளைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ தொடக்ககால நாகரிகங்களின் முக்கிய கூறுகளைக் கற்றல்:<br>○ குடியிருப்புகள் மற்றும் விவசாயம்.<br>○ தொழில்கள் மற்றும் வணிகம்.<br>○ விதிகள், தலைமை மற்றும் ஒத்துழைப்பு.<br>○ நம்பிக்கைகள், கலாச்சாரம், கட்டடங்கள் மற்றும் கருவிகள்.<br>○ வைகை (கீழடி), பொருநை (ஆதிச்சநல்லூர், சிவகளை) ஆகியவற்றைக் குறிப்பிட்டுத் தமிழ்நாட்டின் நாகரிகத்தை ஆராய்தல்.<br>○ **ஆறுகள் மற்றும் இயற்கை**<br>○ மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சியில் ஆறுகளின் பங்கை அறிதல்.(எ.கா. காவிரி ஆற்றங்கரையோர வாழ்க்கை) |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | | ○ தமிழ்நாட்டு வரலாற்றில் புகழ் பெற்ற மனிதர்கள்.<br>○ நகரங்கள், கிராமங்கள், பள்ளிகள் மற்றும் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி பெரியவர்களால் பகிரப்பட்ட கதைகளைக் கேட்டல்.<br>○ பகிர்ந்துகொள்ளப்பட்ட மற்றும் மாறுபட்ட வரலாறுகளைப் புரிந்துகொள்ள இந்தியாவின் பிற பகுதிகளில் வழங்கப்படும் கதைகள். | ○ இயற்கை மற்றும் பாதுகாக்கப்பட்ட இடங்களைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ தமிழ்நாட்டின் சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் உயிர்க்கோளக் காப்பகங்கள்.<br>○ இயற்கை மற்றும் வரலாற்று அடிப்படையில் சில இடங்கள் முக்கியமானவை என்பதைப் புரிந்துகொள்ளுதல். |
| **CG – 6. புவி மற்றும் இயற்கைச் சூழலின் கூறுகளை ஆராய்தல்** | | | |
| **C–6.1. புவி மற்றும் அதன் கூறுகளைப் பற்றிய புரிதல்**<br><br>**C–6.2. இயற்கைச் சூழலின் பல்வேறு கூறுகளைப் பற்றிய புரிதல்**<br><br>**C–6.3. உடனடிச் சூழலில் உள்ள இயற்கை வடிவங்களை அடையாளம் காணுதல்** | ○ **சுற்றியுள்ள சூழலில் பல்வேறு நிலத்தோற்றங்களின் கூறுகளைக் கவனித்தல்** – ஆறுகள், குளங்கள், ஏரிகள், மலைகள், குன்றுகள், வயல்கள், காடுகள் போன்றவை.<br>○ ஒவ்வொரு நிலத்தோற்றங்களிலுள்ள உயிரினங்களை அடையாளம் காணுதல் – நீர்நிலைகளில் உள்ள மீன்கள், மலைகளில் | **பல்வேறு வகையான நிலத்தோற்றங்கள்**<br>○ எ.கா. ஒவ்வொரு நிலத்தோற்றங்களின் பண்புகள்.<br>○ காலநிலை மற்றும் மனித வாழ்க்கையில் நிலத்தோற்றங்களின் தாக்கம்.<br>○ தமிழ்நாட்டின் முக்கிய நிலத்தோற்றங்கள் – நீர்நிலைகள், மலைகள், கடலோரப் பகுதிகள். | **புவியின் கூறுகள்**<br>○ கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள்.<br>○ நீர்நிலைகள்: பெருங்கடல்கள், கடல்கள், ஏரிகள், ஆறுகள், வளைகுடா, விரிகுடா, உப்பங்கழி, தீபகற்பம், தீவு, நீர்ச்சந்தி, நீர்வீழ்ச்சி, குளங்கள், ஓடைகள்.<br>○ நீரின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பு. |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| **C–6.4. மனிதப் பரிணாம வளர்ச்சியில் நிலத்தோற்றங்களின் தாக்கத்தைப் புரிந்துகொள்ளுதல்** | உள்ள குரங்குகள் போன்றவை.<br>○ மனித வாழ்க்கையுடன் நிலத்தோற்றங்களின் தொடர்பு – அவை என்ன நோக்கங்களுக்காக உதவுகின்றன? | | ○ இந்தியாவின் முக்கிய நிலத்தோற்றங்கள் – ஆறுகள், பீடபூமிகள் மற்றும் மலைகள். |
| **CG – 7. புவியின் இயக்கம் மற்றும் மனித வாழ்க்கையின் மீதான அதன் தாக்கத்தைப் புரிந்துகொள்ளுதல்** | | | |
| **C – 7.1. புவியின் பல்வேறு இயக்கங்களைப் புரிந்துகொள்ளுதல்**<br><br>**C – 7.2. புவி இயக்கங்களின் தாக்கத்தால் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துகொள்ளுதல்.** | ○ அடிப்படைத் திசைகள்.<br>○ சூரியனை மையமாகக் கொண்டு திசைகளைப் புரிந்துகொள்ளுதல்.<br>○ ஒரு நாளின் வெவ்வேறு நேரங்களில் சூரியனின் திசை.<br>○ வகுப்பறையை வரைதல்.<br>○ பள்ளியை வரைதல்.<br>○ காலை முதல் மாலை வரை நிழலை வரைதல்.(Sketch The Shadow)<br>○ பருவகால வாழ்க்கை முறை மாற்றங்கள்.<br>○ உடை, உணவு, திருவிழாக்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள்.<br>○ பருவகால உணவு மற்றும் உடைகளுக்கு ஏற்ப மாறுவதன் நன்மைகள். | □ **பருவகாலங்கள்**<br>○ பருவ காலங்களை அளவிடுவதற்கான பல்வேறு கூறுகள்.<br>○ வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்று.<br>○ காலநிலை மற்றும் வானிலை.<br>○ அன்றாட மனித வாழ்க்கையில் வானிலையின் தாக்கம்.<br>○ தாவரங்கள் மற்றும் விலங்குகள் மீதான வானிலையின் தாக்கம். | □ **பருவகாலச் சுழற்சி மற்றும் காலநிலை**<br>○ இந்தியப் பருவகாலங்கள் (கோடை, மழை, குளிர்).<br>○ தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகாற்றுகள் – ஓர் அறிமுகம். |

TNSCERT DRAFT SYLLABUS

| CG – 8. பல்வேறு போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகளைக் கற்றல் | | | |
|---|---|---|---|
| **C–8.1. பல்வேறு போக்குவரத்து முறைகளை (தரைவழி, நீர்வழி, வான்வழி) அடையாளம் கண்டு வகைப்படுத்துதல்**<br><br>**C–8.2. பழைய மற்றும் நவீன தகவல் தொடர்பு முறைகளை அறிந்து கொள்ளுதல்.** | **பண்டைய போக்குவரத்து முறைகள்:**<br>○ விலங்குகள் (மாட்டு வண்டி, குதிரை வண்டி). | ○ நம்மைச் சுற்றியுள்ள போக்குவரத்து – (தரைவழி, நீர்வழி, வான்வழி).<br>○ தரைவழிப் போக்குவரத்து.<br>○ பல்வேறு வகைகள்.<br>○ உங்களுக்குத் தெரிந்த தகவல்தொடர்புச் சாதனங்கள். | **நவீனத் தகவல் தொடர்பு முறைகள்:**<br>○ தொலைபேசி.<br>○ மின்னியத் தொடர்பு.<br>○ தற்கால மற்றும் கடந்தகாலத் தகவல்தொடர்பு முறைகள்: தபால் சேவைகள் / தந்தி. |
| **CG 9: விண்வெளியை ஆராய்தல்** | | | |
| **C–9.1. விண்வெளியின் பல்வேறு அம்சங்களைப் புரிந்துகொள்ளுதல்**<br><br>**C–9.2. முழு நிலவுச் சுழற்சியை விவரித்தல்** | ○ இரவு வானத்தை உற்றுநோக்கல்.<br>○ நட்சத்திரங்கள் மற்றும் நிலவு. | ○ நட்சத்திரங்கள் மற்றும் விண்மீன் கூட்டங்கள்.<br>○ நிலவின் நிலைகள் (Phases of the Moon).<br>○ நிலவுச் சுழற்சி. | ○ ஓதங்கள் (Tides). |

TNSCERT DRAFT SYLLABUS

| | |
|---|---|
| கலைகள் ஒருங்கிணைப்பு | **கற்பவர்கள் ஈடுபடுபவை**<br>- வரைதல் மற்றும் வண்ணமிடுதல் (குழந்தை, குடும்பம், சமூகம், இயற்கை, நிலதோற்றங்கள்)<br>- உருவங்களை உருவாக்குதல் (அடையாளங்கள், திருவிழாக்கள், சுற்றுச்சூழல், பருவகாலங்கள்)<br>- களிமண் மாதிரிகள் (மக்கள், பொருள்கள், கலைப்பொருள்கள், நிலதோற்றங்கள்)<br>- சுவரொட்டி உருவாக்கம் (பாதுகாப்பு, சுற்றுச்சூழல், சமூகப் பொறுப்புகள்)<br>- பொம்மைகள் உருவாக்கம், கதை கூறுதல் மற்றும் பங்கேற்று நடித்தல், நாட்டுப்புறக் கலை, ஆடல் மற்றும் பாடல் (உள்ளூர் கலைகள் மற்றும் மரபுகள்)<br>- உற்றுநோக்கி வரைதல் (நிலவின் நிலைகள், வானிலை, தாவரங்கள்)<br>- சுவரோவியங்கள், மாதிரிகள், நிலவரைபடங்கள் (வகுப்பறை, பள்ளி, சுற்றுப்புறம், வழித்தடங்கள்)<br>- காலக்கோடுகள், பட வரிசைமுறை (தனிமனித வரலாறு, அன்றும்-இன்றும்)<br>- இயற்கை சார்ந்த கலை (இலைச்சாறு ஓவியங்கள், விதைக்கலை, நிலத்தோற்றக் கலை (Landscape Art)) |
| வாழ்வியல் திறன்கள் ஒருங்கிணைப்பு | **கற்பவர்களிடம் வளர்க்கப்படுபவை**<br>- சுய விழிப்புணர்வு மற்றும் மனவெழுச்சியைப் பற்றிய புரிதல், பரிவு மற்றும் பிறர்மீது அக்கறை காட்டுதல்<br>- தனிப்பட்ட மற்றும் சமூக எல்லைகளை மதித்தல்<br>- குழுப்பணியில் அடையாளங்கள், உறவுமுறைகள் மற்றும் சமூகப் பொறுப்புகளை வளர்க்க தகவல்தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பைப் பயன்படுத்துதல்.<br>- சுற்றுச்சூழல், பருவகாலங்கள், போக்குவரத்து மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் குறித்த செயல்திட்டங்கள் மூலம் முடிவெடுத்தல், சிக்கல் தீர்த்தல் மற்றும் தகவமைத்தலை மேம்படுத்திக் கொள்ளுதல்.<br>- வரலாறு, புவியியல் மற்றும் விண்வெளி தொடர்பான பாடப்பொருள் மூலம் உற்றுநோக்கல், தேடித்தேர்தல், எண்ணங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வரிசைப்படுத்துதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| விழுமியங்கள் ஒருங்கிணைப்பு | கற்பவர்கள் மேம்படுத்திக் கொள்பவை |
|---|---|
| | • சமத்துவம்,மரியாதை, சுயமதிப்பு, சுயமரியாதை,பிறரை மதிக்கும் பண்பு, ஒன்றிணைந்த பொறுப்புணர்வு, பரிவு, கனிவு மற்றும் கருணை போன்ற மதிப்புகளை வகுப்பறையில் நேரடி அனுபவங்களின் மூலம் வளர்த்துக்கொள்ளுதல்.<br>• குடும்பம்,சமூகம் மற்றும் பண்பாடு போன்றவற்றை அடையாளம் கண்டு பன்முகத்தன்மைக்கு மரியாதை செலுத்தும் மனப்பான்மை பெறுதல்.<br>• உரிமைகள், நலவாழ்வு, நிறுவனச் செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல்கள் மூலமாக மனிதப் பண்புகள் பாதுகாப்பு, ஒத்துழைப்பு மற்றும் சமூக ஆதரவுகளை மேம்படுத்துதல்.<br>• தொழிலாளர்கள், அவர்களின் சேவைகள் மற்றும் ஒத்துழைப்பு மூலமாகச் சமூக உதவியாளர்களையும், நிர்வாகக் கட்டமைப்பினையும் உணர்ந்து போற்றுதல்.<br>• இயற்கை, நிலஅமைப்புகள், நீர் மற்றும் காலநிலை குறித்த தொடர் கலந்துரையாடல்கள் வாயிலாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையினை உறுதிப்படுத்துதல்.<br>• கலைகள், விளையாட்டுகள், பண்பாட்டுப் பாரம்பரியம் மற்றும் வரலாறு வாயிலாகப் பண்பாட்டுப் பெருமையையும், ஒற்றுமை மற்றும் நன்றியுணர்வை வளர்த்துக்கொள்ளுதல். |

**குறிப்பு: பாடத்திட்டம் வயதுக்கு ஏற்ற கலைச் செயல்பாடுகள், வாழ்க்கைத் திறன்கள் மற்றும் விழுமியங்களை உள்ளடக்கிய மற்றும் தொடர்புடைய பாடத்திட்டக் கூறுகளை ஒருங்கிணைக்கிறது.**

TNSCERT DRAFT SYLLABUS

**கற்பித்தல் முறைகள் (Pedagogical Process)**

மூன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கான சமூக அறிவியல் கற்பித்தல் முறையானது ஒன்றிணைந்த கற்றல், இடைவினையாற்றி குழுவாகக் கற்றல் மற்றும் பல்துறை இணைந்த செயல்திட்டப்பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. குழந்தைகள் பெரும்பாலும் குழுச் செயல்பாடுகள் மூலமாகவும், தேடித் தேர்ந்து பகிர்ந்தும், கலந்துரையாடியும், பங்கேற்று நடித்தும், கலை, கைவினைச் செயல்கள் மூலமாகவும், எளிய கள ஆய்வுகள் மூலமாகவும், செயல்திட்டங்கள் வாயிலாகவும், மொழி, கணிதம், சுற்றுச்சூழல் அறிவியல், கலை மற்றும் வாழ்வியல் திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள். கற்போரின் பங்கேற்பு, தகவல்தொடர்பு, ஒத்துழைப்பு மற்றும் அவர்களின் புரிதலைக் கவனமாக உற்றுநோக்குவதன் மூலம் ஆசிரியர்கள் வழிகாட்டுநர்களாகச் செயல்படுவர். குழந்தைகள் பேசவும், விவரிக்கவும், சிந்திக்கவும், தங்களது சொற்களைப் பயன்படுத்தி, சுயமாகவும் முறையாகவும் எழுதும் திறனை வளர்த்துக்கொள்ளவும் முறையான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. கற்றல் சூழல், குழு வேலைகள், வரைபடங்கள், ஓவியங்கள் மற்றும் செயல்திட்ட விளைவுகளைக் காட்சிப்படுத்தி, குழந்தைகளின் செயல்பாடுகளைக் கொண்டாடி ஆசிரியர்களின் ஊக்கமளிக்கும் "மகிழ்ச்சிக் குறிப்புகளை" (happy notes) இணைப்பதன் மூலம், குழந்தைகளிடம் கற்றலில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் வளர்க்கப்படுகின்றன.

**மதிப்பீட்டு உத்திகள் (Assessment Strategies)**

மதிப்பீடு என்பது அடிப்படையில் தொடர்ச்சியாக நடைபெறக்கூடிய மதிப்பீடாகவும் உற்றுநோக்கல் அடிப்படையிலும் குழந்தை மையமாகவும் எளிய மற்றும் இலகுவான தேர்வுகளை முதன்மையாகக் கொண்டது. முறையான எழுத்துத் தேர்வுக்கு குறைவான முக்கியத்துவமே அளிக்கிறது. ஆசிரியர்கள், குழந்தைகளைத் தொடர்ச்சியான உற்றுநோக்கல், குழு கலந்துரையாடல், செயல்திட்ட முடிவுகள், வாய்மொழிப் பகிர்வுகள், சிந்தனையைத் தூண்டும் உரையாடல்கள் மற்றும் தொடர் எழுத்துத் தேர்வுகள் மூலம் மதிப்பீடு செய்கின்றனர். குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, சமூகத் திறன்கள், ஆர்வம் மற்றும் திறன்களை மேம்படுத்த தனிநபர் திரள் பதிவேடுகள் (Individual Learner Profiles) பராமரிக்கப்படுகின்றன. குழந்தைகள் ஆண்டு முழுவதும் செய்த செயல்திட்டங்கள், படைப்புகள், ஓவியங்கள், வரைபடங்கள் மற்றும் சுருக்கக் குறிப்புகள் ஆகியவை சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்ட விவரங்கள் (Portfolio) அல்லது கோப்புகளில் முழுமையான கற்றலுக்கான பதிவுகளாகப் பராமரிக்கப்படுகின்றன. ஆசிரியரின் முன்னேற்ற அறிக்கையுடன் கூடிய இத்தொகுக்கப்பட்ட விவரங்கள், தரவரிசை அல்லது ஒப்பீட்டை விட குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும்வகையில் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

TNSCERT DRAFT SYLLABUS